# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-45000032, 9677048718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com

இணையதளம் : bankubeutn.in


சுற்றறிக்கை எண்:121:2022 15.07.2023

அன்பார்ந்த தோழர்களே !

## வேண்டுகோள்

நமது வங்கியின் பாபநாசம் கிளையில் தற்காலிக ஊழியராகப் பணியாற்றிவரும் தோழர்.K.முருகானந்தம் அவர்களது பெண் குழந்தை கடந்த சில மாதங்களாக உடல் நலக் குறைவால் அவதிக்குள்ளானது. உணவுக்குழாயின் துவாரம் சிறியதாகவுள்ளதால், எதுவும் சாப்பிட இயலாத நிலையிழுள்ளது.

திருச்சி காவேரி மருத்துவமனையில் உடல் நிலை முழுமையாகப் பரிசோதிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை மூலம் உணவுக்குழாயை சரி செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்கள். குழந்தையின் எடை மிகவும் குறைவாகவுள்ளதால், உடல் எடையை அதிகரிக்க, மூக்கு வழியாக உணவு கொடுக்க ஒரு தற்காலிக குழாய் செருகப்பட்டு, உணவு வழங்கப்பட்டு வருகிறது. அடுத்த வாரம், அறுவை சிகிச்சை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை தோழர்.K.முருகானந்தம் குடும்பத்தினர் ரூ.3,70,000/- வரை மருத்துவ செலவு செய்துள்ளனர். அறுவை சிகிச்சைக்காக மேலும் ரூ.3,00,000/- செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தோழர்.K.முருகானந்தம் தற்காலிக ஊழியராக இருப்பதால், அவருக்கு வங்கி வழங்கும் காப்பீட்டு மருத்துவ உதவிகள் பெற வாய்ப்பு இல்லை. குறைவான ஊதியம் பெறும் நிலையில், அவர் குழந்தையின் மருத்துவ செலவுகளை சமாளிக்க இயலாத நிலையிலுள்ளார்.

நமது சங்கத்தின் சார்பாக உடனடி உதவியாக ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இந்தச் சூழலில், இந்த தொகை மிகவும் குறைவு. இந்த இக்கட்டான சூழலில், அவருடன் பணியாற்றும் வங்கி ஊழியர்களாகிய நாம், நம்மால் இயன்ற தொகையை அக்குடும்பத்திற்கு வழங்கினால், அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாம் வழங்கும் சிறிய தொகையும், அவர்களுக்கு மிகப் பெரிய உதவியாகும்.

நமது தோழர்கள், தங்கள் பங்களிப்பை நமது சங்க கணக்கு எண்: 332602070023694ல் செலுத்தி, தங்கள் சமூக கடமையை நிறைவேற்றிட கேட்டுக் கொள்கிறோம்.

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்